# இந்திய அரசியலமைப்பு

## இந்திய அரசியலமைப்பு முகவுரை

- 1946 டிசம்பர் 13-ல் ஜவஹர்லால் நேருவின் தீர்மானமே இந்திய அரசியலமைப்பின் முகவுரையாக இந்திய அரசியல் நிர்ணய சபையில் 1947 – ஜனவரி 22-ல் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

## முகவுரை திருத்தங்கள்:

- முகவுரை இதுவரை ஒரே ஒரு முறை மட்டுமே திருத்தம் செய்யப்பட்டுள்ளது. 1976-ம் ஆண்டு 42-வது சட்ட திருத்தத்தின் மூலம் பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் திருத்தம் செய்தார்

- சமத்துவம், சகோதரத்துவம் என்ற வார்த்தை பிரெஞ்சு புரட்சியிலிருந்து எடுக்கப்பட்டது. (பிரெஞ்சு புரட்சியிலிருந்து எடுக்கப்பட்டது (பிரெஞ்சு புரட்சி 1789-1799)

- நடுநிலையான நீதி என்ற வார்த்தை ரஷ்ய புரட்சி (1917)லிருந்து எடுக்கப்பட்டது.

- அமெரிக்கா அரசியலமைப்பு தான் முதல் முதலாக முகப்புரையுடன் ஆரம்பிக்கப்பட்ட அரசியலமைப்பு ஆகும்.

## முகவுரை பற்றிய சிறப்பு கூற்றுகள்

- **K.A.பல்கிவாலா** –"அரசியலமைப்பின் அடையாள அட்டை" என்றார்.
- **அல்லாடி கிருஷ்ணசாமி** - நாம் என்ன நினைத்தோம் என்ன கனவு கண்டோமோ அதனுடைய வெளிப்பாடே முகவுரை" ஆகும். என்றார்
- **K.M.முன்ஷி** – "இந்திய ஜனநாயக குடியரசின் ஜாதகம்" என்றார்.
- முன்னாள் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி **ஹிதாயத்துல்லா**" - அமெரிக்கா அரசியலமைப்பின் ஆன்மா என்றும் விடுதலைப்பிரகடத்தை போன்றுள்ளது" என்றும் வர்ணித்தார்.
- **பண்டிட் தக்கூர் தாஸ் பகர்ஹவா** – "இந்திய அரசியலமைப்பின் முக்கிய பகுதி முகப்புரை" "அரசியலமைப்பின் உயிர்" என்றும் அரசியலமைப்பின் திறவுகோல் என்றும் நகை செட் போன்றது" என்றும் வர்ணித்தார்.

## மற்ற நாடுகள் உருவாக்கிய அரசியலமைப்பு

| நாடு | விதிகள் | காலம் |
|---|---|---|
| அமெரிக்கா | 7 | 4 மாதம் |
| கனடா | 147 | 2ஆண்டுகள் 6 மாதம் |
| ஆஸ்திரேலியா | 128 | 9 வருடம் |
| தென் ஆப்ரிக்கா | 153 | 1 வருடம் |

## அட்டவணைகள்

- **முதலாவது அட்டவணை**
  1. நாட்டின் பெயர் மற்றும் அதன் பரப்பளவு
  2. மாநிலத்தின் பெயர் மற்றும் அதன் பரப்பளவு

- **இரண்டாவது அட்டவணை**
  கீழ்காண்பவர்களின் சிறப்புசலுகைகள் மற்றும் சம்பள பட்டியலை உள்ளடக்கியது.
  1. குடியரசுத் தலைவர் - 1, 50,000
  2. மாநில ஆளுநர் - 1, 10,000
  3. சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகர் மக்கவை, மாநிலங்களவை
  4. சபாநாயகர் மற்றும் துணை சாநாயகர் சட்டமன்றம்
  5. உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் நீதிபதிகள்
  6. உயர்நீதிமன்ற நீதிபதி
  7. தலைமை கணக்கு தணிக்கை அதிகாரி.

- **மூன்றாவது அட்டவணை**
  கீழ்காண்பவர்களின் பதவி பிரமாண ஆணைகள்
  1. மத்திய அமைச்சர்கள்
  2. பாராளுமன்ற தேர்தல் வேட்பாளர்கள்
  3. பாராளுமன்ற உறுப்பினர்கள்
  4. உச்ச நீதிமன்ற நீதிபதிகள்
  5. தலைமை கணக்குத் தணிக்கை அதிகாரி
  6. மாநில அமைச்சர்கள்
  7. மாநில சட்டமன்ற தேர்தல் வேட்பாளர்கள்
  8. சட்டமன்ற உறுப்பினர்கள்
  9. உயர்நீதிமன்ற நீதிபதிகள்

- **நான்காவது அட்டவணை**
  1. மாநிலங்களவையின் ராஜ்ய சபா இட ஒதுக்கீடு மாநிலங்களில் மற்றும் யூனியன் பிரதேசங்களில்

- **ஐந்தாவது அட்டவணை**
  1. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் பகுதிகளின் நிர்வாகம்.

- **ஆறாவது அட்டவணை**
  1. அஸ்ஸாம் மேகாலாயா, திரிபுரா, மிசோரம் போன்ற மலைவாழ் மக்கள் பகுதியின் நிர்வாகம்.

- **ஏழாவது அட்டவணை**
  1. மத்திய மாநில அரசு அதிகார பங்கீடு 3 பட்டியல் உள்ளது. அதில் உள்ள துறைகள் பற்றியது.

| S.No | List | 1950 | 2018 |
|---|---|---|---|
| 1. | மத்திய பட்டியல் (Union List) | 97 | 100 |
| 2. | மாநில பட்டியல் (State List) | 66 | 61 |
| 3. | பொது பட்டியல் (Concurrent List) | 47 | 52 |

- **எட்டாவது அட்டவணை**
  1. இந்திய அரசின் அதிகார பூர்வ மொழிகள் பற்றியது.
  2. தற்பொழுது 22 மொழிகள் உள்ளன. 1950-ல் 14 மொழிகள் மட்டுமே இருந்தது.
     - 1967-21 வது சட்டத்திருத்தத்தின் படி சிந்திமொழி சேர்க்ப்பட்டது.
     - 1992-71 வது சட்டத்திருத்தத்தின் படி கொங்கனி, மணிப்புரி, நேபாளி மொழிகள் சேர்க்கப்பட்டது.

- ○ 2003-92 வது சட்டத்திருத்தத்தின் படி போடா, டோங்கிரி, மைதிலி, சாந்தலி போன்ற மொழிகள் சேர்க்கப்பட்டது.

  1950-ல் இருந்த 14 மொழிகள் அஸ்ஸாமி, பெங்காளி, குஜராத்தி, ஹிந்தி, கனடா, காஷ்மீரி, மலையாளம், மராத்தி, ஒரியா, பஞ்சாபி, சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு, உருது.

- **ஒன்பதாவது அட்டவணை**
  1. நில சீர்திருத்த சட்டங்கள் பற்றியது. இந்த அட்டவணையில் முதல் சட்டத்திருத்தம் 1951-ல் செய்யப்பட்டதை இணைத்துள்ளார்கள். அடிப்படை உரிமைகள் மீதான சட்ட திருத்தமாகும். இந்த அட்டவணையை நீக்க முடியாது.

- **பத்தாவது அட்டவணை**
  1. MP, MLA – களின் தகுதி நீக்க முறை பற்றியது.
  2. கட்சித் தாவல் தடைச் சட்டம் பற்றியது.
  3. 1985-52 வது சட்ட திருத்தம் அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளது.

- **பதினோறாவது அட்டவணை**
  1. பஞ்சாயத்து ராஜ் பற்றியது. இதில் 29 விதமான அம்சங்கள் கூறப்பட்டடுள்ளது. இதில் 1992-73-வது சட்ட திருத்தம் கூறப்பட்டுள்ளது.

- **பனிரெண்டாவது அட்டவணை**
  1. நகராட்சி பற்றியது இதில் 18 விதமான அம்சங்கள் கூறப்பட்டுள்ளது, இதில் 1992-74-வது சட்ட திருத்தம் கூறப்பட்டுள்ளது.

  இந்திய அரசியலமைப்பு நடைமுறைபடுத்தப்பட்டபொழுது அட்டவணைகள் 8 தற்பொழுது அட்டவணைகள் 12.

**JVP கமிட்டி 1949 ஏப்ரல்**

- ஜவஹர்லால் நேரு வல்லபாய் படேல் மற்றும் பட்டாபி சீத்தாராமையா ஆனால் JVP கமிட்டி தார் கமிட்டியின் அறிக்கையை நிராகரித்தது.

- பொட்டி ஸ்ரீராமுலு அவர்கள் 56 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து இறக்கிறார். எனவே மெட்ராஸ் மாகாணத்திலிருந்து ஆந்திராதனி மாநிலமாக பிரிகிறது. முதல்மொழி வாரி மாநிலம் ஆந்திரா மாநிலம் 1953 அக்டோபர் 1.

**மாநில சீரமைப்பு மற்றும் மொழிவாரி மாநிலம் கமிட்டி**

- பசல் அலி கமிட்டி 1953 டிசம்பரில் அமைக்கப்படுகிறது. அந்த கமிட்டி 1955 செப்டம்பரில் அறிக்கை தாக்கல் செய்கிறது.
- 1. 4 விதமாக பிரிந்துள்ள மாநிலங்களை ஒன்றாக்க வேண்டும்.
  1950 - ல் இருந்த 4 விதமான மாநிலங்கள்.
  - **Part A –** ஆங்கிலேயர்கள் ஆண்ட மாகாணம்
  - **Part B –** சுதேச மன்னர்கள் ஆண்ட மாகாணம்
  - **Part C –** ஆங்கிலேயர்கள் கீழ் ஆண்ட சுதேச மன்னர்கள் மாகாணம்
  - **Part D –** அந்தமான் நிக்கோபார் தீவுகள். அவர்கள் அறிக்கை படி மாநிலங்கள் சீரமைப்பு.
- மாநில சீரமைப்பு ஆணையம் மற்றும் சட்டம் 1956.

- 1956 – 7வது சட்டத்திருத்தின் படி 14 மாநிலங்கள் 6 யூனியன் பிரதேசங்கள்
- 1956 நவம்பர் 1-ல் உருவாக்கப்பட்டது

**தார் கமிட்டி**

- 1920 ல் நாக்பூரில் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் மொழிவாரி மாநிலமாக பிரிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- 1948- ல் ஜுன்-ல் இந்திய அரசியல் நிர்ணய சபை மாநில மறுசீரமைப்பு பற்றி ஓய்வு பெற்ற அலகாபாத் உயர்நீதிமன்ற நீதிபதி S.K. தார் கமிட்டி அறிக்கை சமர்ப்பித்தது. அறிக்கையில் உடனடியாக மொழிவாரி மாநிலம் அமைப்பதற்கு தார் கமிட்டி நிராகரித்தது.
- 1948 டிசம்பர் -ல் காங்கிரஸ் கமிட்டியும் ஒரு கமிட்டி நியமித்தது. அது JVP கமிட்டி
    1. J. ஜவஹர்லால் நேரு
    2. V. வல்லபாய் படேல்
    3. P பட்டாபி சீத்தராமையா
- JVB கமிட்டியும் மொழிவாரி மாநிலம் அமைப்பதை தள்ளிபோட அறிக்கை தாக்கல் செய்தது.

**ஆந்திர மாநிலம் அமைக்கப்படுதல் 1953**

- 1917- லிருந்தே தனி ஆந்திர மாகாணம் வேண்டும் என்று வற்புறுத்தினார்கள்.
- 1947- ல் ஓமந்துர் ராமசாமி ரெட்டியர் சென்னை மாகாண முதலமைச்சர் ஆனவுடன் தனி ஆந்திர மாநில கோரிக்கை வலுபெற்றது.
- 1952 டிசம்பர் 19-ல் இந்திய அரசு ஆந்திர மாநிலம் அமைக்கப்படும் என்று அறிவித்தது.
- 1953 அக்டோபர் 1- ல் முதல் மொழிவாரி மாநிலமாக ஆந்திரா பிரிக்கப்பட்டது.
- ஆந்திராவின் முதல் முதலமைச்சர் T. பிரகாசம், ஆளுநர் C.M. திரிவேதி.
- மொழிவாரி மாநிலம் மற்றும் மாநில மறுசீரமைப்பு கமிஷன் பசல் அலி கமிஷன் பசல் அலி கமிஷன் (1953)
- 1953 டிசம்பர் -ல் மொழிவாரி மாநிலம் அமைப்பதற்கும் மாநிலங்கள் சீரமைப்பதற்கும் ஒரு குழு அமைக்கப்பட்டது. அதில் பசல் அலி தலைவராகவும் நியமிக்கப்பட்டார்.

**மாநில சீரமைப்பு சட்டம்**

- 1956-ல் ஆகஸ்டு 31-ல் மாநில சீரமைப்பு சட்டம் நிறைவேற்றப்பட்டது.
- **1956-ல் 7 –வது சட்டத்திருத்தத்தின் படி 14 மாநிலங்கள் 6 யூனியன் பிரதேசங்கள் பிரிக்கப்பட்டது.**

14 மாநிலங்கள்

**1. அஸ்ஸாம் 2. ஆந்திரா 3. பீகார் 4. மகாராஷ்ட்ரா 5. கேரளா 6. மத்திய பிரதேசம் 7. சென்னை 8. மைசூர் 9. ஒரிசா 10. பஞ்சாப் 11. ராஜஸ்தான் 12. உத்திரபிரதேசம் 13. மேற்கு வங்காளம் 14. ஜம்மு காஷ்மீர்**

| | |
|---|---|
| 1960 | குஜராத் 15-வது மாநிலம் |
| 1961 | தாத்ரா நாகர் ஹவேலி 10-வது சட்டத்திருத்தம் - யூனியன் பிரேதசம் |
| 1962 | கோவா. டாமன், டையூ<br>சட்டத்திருத்தம் - யூனியன் பிரதேசம் |
| 1962 | பாண்டிச்சேரி 14-வது சட்ட திருத்தம் யூனியன் பிரதேசம் |
| 1963 | நாகலாந்து 16-வது மாநிலம் |
| 1966 | ஹரியானா 17-வது மாநிலம் |
| 1966 | சண்டிகர்யூனியன் பிரதேசம் |
| 1971 | இமாச்சல பிரதேசம் 18-வது மாநிலம் |

| | |
|---|---|
| 1972 | மணிப்பூர் 19-வது மாநிலம் |
| 1972 | திரிபுரா 20-வது மாநிலம் |
| 1975 | சிக்கிம் 22-வது மாநிலம் 36-வது சட்டத்திருத்தம் |
| 1987 | மிசோரம் 23-வது மாநிலம் 53-வது சட்டத்திருத்தம் |
| 1987 | அருணாச்சல பிரதேசம் 24-வது மாநிலம் 55-வது சட்டத்திருத்தம் |
| 1987 | கோவா 25-வது மாநிலம் 56-வது சட்டத்திருத்தம் |
| 2000 | சட்டீஸ்கர் 26- வது மாநிலம் |
| 2000 | உத்ரகாண்ட் 27- வது மாநிலம் |
| 2000 | ஜார்கண்ட் 28-வது மாநிலம் |
| 2014 | தெலுங்கானா 29-வது மாநிலம் |
| 2019 | ஜம்முகாஷ்மீர் மாநிலத்திலிருந்து 2 யூனியன் பிரதேசமாக மாற்றப்பட்டது. ஜம்மு காஷமீர் லடாக் |

**சிறப்பு அந்தஸ்து மாநிலங்கள்**

அரசியலமைப்பு பகுதி 21ல் கூறப்பட்டுள்ளது. விதி 371 முதல் 371J வரை.

| விதி | மாநிலங்கள் |
|---|---|
| 371 | மகாராஷ்டிரா மற்றும் குஜராத் |
| 371A | நாகலாந்து |
| 371B | அஸ்ஸாம் |
| 371C | மணிப்பூர் |
| 371D | ஆந்திரா மற்றும் தெலுங்கானா |
| 371E | மத்திய பல்கலைக்கழகம் உருவாக்கம் ஆந்திரா |
| 371F | சிக்கிம் |
| 371G | மிசோரம் |
| 371H | அருணாச்சல பிரதேசம் |
| 371I | கோவா |
| 371J | கர்நாடகா |

**மாநிலங்கள் பெயர் மாற்றம்**

- முதன் முதலாக பெயர் மாற்றம் செய்யப்பட்ட மாநிலம் உத்திரபிரதேசம்
- 1950-ல் ஒன்றிணைக்கப்பட்ட மாகாணங்கள் என்ற பெயர் உத்திரபிரதேசம் என்று மாற்றப்பட்டது.
- 1968-ல் சட்டம் இயற்றப்பட்டு 1969-ல் மெட்ராஸ் மாகாணம் தமிழ்நாடு என்று மாற்றப்பட்டு ஜனவரி 14-ல் நடைமுறைப்படுத்தப்பட்டது.
- முதலமைச்சர் C.N. அண்ணாதுரை மாற்றினார்.
- 1973-ல் மைசூர் என்ற பெயர் கர்நாடகா மாநிலம் என்று மாற்றப்பட்டது.
- 1973-ல் லட்சத்தீவு மினிகாய் அமீன் திபோதீவு என்ற தீவுகள் லட்சத்தீவுகள் என்று மாற்றப்பட்டது.
- 1991- வருடம் 69-வது சட்டத் திருத்தத்தின் படி டெல்லி என்ற பெயர் டெல்லி தேசிய தலைநகர் பிரதேசம் என்று மாற்றப்பட்டது. 1992-ல் நடைமுறைப்படுத்தப்பட்டது.
- 2006-ல் உத்தராஞ்சல், உத்ராகாண்ட் மாநிலம் என்று மாற்றப்பட்டது.
- 2006-ல் பாண்டிச்சேரி, புதுச்சேரி என்று மாற்றப்பட்டது.
- 2011-ல் ஒரிசா ஒடிசா என்று மாற்றப்பட்டது.

**இந்திய குடியுரிமை பெற்றால் அதன் சலுகைகள்**

- சாதி, மதம், நிறம் அடிப்படையில் இந்திய குடிமக்களுக்கு அடிப்படை உரிமைகள் மறுக்கக் கூடாது (விதி 15)
- பொது வேலை வாய்ப்பு (விதி 16)
- சுதந்திர உரிமை (விதி 19)
- கல்வி மற்றும் கலாச்சார உரிமை (விதி 29, 30)

- இந்திய குடிமகன் மட்டுமே தேர்தலில் வாக்களிக்க முடியும்.
- இந்திய குடிமகன் மட்டுமே M.P.M.L.A. ஆக முடியும்
- இந்திய குடிமகன் மட்டுமே இந்தியாவின் உயர் பதவிகளை பெற முடியும். எ.கா. குடியரசுத் தலைவர், பிரதமர்

**பிறப்பால் குடியுரிமை பெறுதல்**

- இக்குடியுரிமை பிறப்பிடத்தால் தீர்மானிக்கப்படுகிறது. 1950 ஜனவரி 26 முதல் 1987 ஜீலை வரை இந்தியாவில் பிறந்த குழந்தைகளின் பெற்றோர் எந்த நாட்டவராக இருப்பினும் அவர்கள் பிறப்பால் குடியுரிமை பெறுகின்றனர்.
- 1987 ஜீலை 1 மற்றும் அதற்குப் பின் இந்தியாவில் பிறக்கும் குழந்தையின் பெற்றோரில் ஒருவர் அச்சமயத்தில் இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
- 2004 டிசம்பர் 3 மற்றும் அதற்குப் பின் இந்தியாவில் பிறந்தவர்கள் பிறப்பால் குடியுரிமை பெறுகின்றனர். அல்லது பெற்றோரில் ஒருவர் இந்தியக் குடிமகனாகவும் மற்றொருவர் சட்ட விரோதமான இந்தியாவிற்குள் இடம்பெயர்ந்தவராக இல்லாதிருந்தால் குடியுரிமை பெறுகின்றனர்.

**வம்சாவளியால் குடியுரிமை பெறுதல்**

- 1950 ஜனவரி 26 முதல் 1992 டிசம்பர் 10 க்கு முன்னர் வெளிநாட்டில் பிறந்திருந்தாலும் அவருடைய தந்தை இந்தியக் குடிமகனாக இருக்கும் பட்சத்தில் அவர் வம்சாவளி மூலம் இந்திய குடியுரிமையைப் பெறுகிறார்.
- 1992 டிசம்பர் 10 மற்றும் அதற்கு பின்னர் வெளிநாட்டில் பிறந்தவர்களின் பெற்றோரில் எவரேனும் ஒருவர் அச்சமயத்தில் இந்திய குடிமகனாக இருந்தால் அவர் இந்தியக் குடியுரிமையைப் பெறுகிறார்.
- 2004 டிசம்பர் 3 ம் நாள் முதல் வெளிநாட்டில் பிறந்தவர்கள் அவர்களுடைய பிறப்பினை ஒரு வருடத்திற்குள் இந்திய தூதரகத்தில் பதிவு செய்யவில்லை எனில் இந்திய வம்சாவளிக் குடிமகனாக முடியாது.

**பதிவு செய்தல் மூலம் குடியுரிமை பெறுதல்**

- இந்திய வம்சாவளியைச் சார்ந்த ஒரு நபர் எந்த ஒரு நாட்டில் வசித்தாலும் அல்லது பிரிக்கப்படாத இந்தியாவிற்கு வெளிப்பகுதியில் வசிப்பவராக இருந்தாலும் பதிவு செய்தலின் மூலம் குடியுரிமை பெறலாம்.
- இந்தியக் குடிமகனை திருமணம் செய்த ஒருவர் பதிவின் மூலம் விண்ணப்பிக்கும் முன் ஏழு ஆண்டுகள் இந்தியாவில் வசித்தவராக இருத்தல் வேண்டும்.

**இயல்புக் குடியுரிமை**

- ஒருவர் விண்ணப்பிப்பதன் மூலம் மத்திய அரசு அவருக்கு இயல்பு குடியுரிமைக்கான சான்றிதழை வழங்குகிறது.
- எந்த ஒரு நாட்டிலும் குடிமகனாக இல்லாத ஒரு இந்தியர் அவர் வசிக்கும் நாட்டின் குடிமகனாவதை தடுக்கும் பொருட்டு இயல்பு குடியுரிமை வழங்கப்படுகிறது.
- வெளிநாட்டுக் குடியுரிமையை ஒருவர் துறக்கும் பட்சத்தில் அவருக்கு இயல்பு குடியுரிமை வழங்கப்படுகிறது
- ஒருவர் இந்தியாவில் வசிக்கும் பட்சத்தில் அல்லது இந்திய அரசுப்பணியில் இருக்கும் பட்சத்தில் (அ) ஆண்டு முழுவதும் இந்தியாவில் தங்கியிருக்கும் பட்சத்தில் இக்குடியுரிமையை பெறுகிறார்.
- நல்ல பண்புகளையும் இந்திய அரசியலமைப்பில் எட்டாவது அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஏதேனும் ஒரு மொழியில் (தற்போது 22 மொழிகள்) போதிய அறிவினையும் பெற்ற ஒருவர் இயல்புக் குடியுரிமையைப் பெற தகுதியுடையவராவார்.

**பிரதேசங்களை இணைத்தல் மூலம் பெறும் குடியுரிமை**

- எந்தவொரு வெளிநாட்டுப் பகுதியும் இந்தியாவுடன் இணையும் போது இந்திய அரசு அப்பகுதி மக்களை இந்திய குடிமக்களாக ஏற்றுக்கொள்கிறது. அந்த குறிப்பிட்ட நாளில் இருந்து அவர்கள் இந்திய குடிமக்களாகின்றனர். உதாரணமாக பாண்டிச்சேரி இந்தியாவுடன் இணைந்த பொழுது, இந்திய அரசு அம்மக்களுக்கு 1962ல் இந்திக் குடியுரிமைக்கான ஆணையை வழங்குகிறது.

**குடியுரிமையை இழத்தல்**

- குடியுரிமையை பெற்றவர் தாமாக வந்து தனது குடியுரிமையை துறந்து மற்ற நாட்டின் குடியுரிமையை பெறுதல்.
- இந்திய குடிமகன் யாரேனும் மற்ற நாட்டு குடியுரிமை பெற்றால் தானாகவே இந்திய குடியுரிமையை இழக்க நேரிடும்.
- பொய்யான தகவல் அளித்து குடியுரிமை பெற்றால் இந்திய குடியுரிமையை இழந்து விடுவர்.
- இந்திய அரசியலமைப்பை அவமதித்தால் இந்திய குடியுரிமையை இழந்து விழுவர்.
- எதிரி நாடுகளுக்கு நம் நாட்டின் ரகசியங்களை வெளியிட்டால் குடியுரிமையை இழந்து விழுவர்.
- வெளிநாட்டில் இரண்டு ஆண்டு சிறை தண்டனை பெற்றால் குடியுரிமையை இழந்து விழுவர்
- இந்தியாவுடன் எவ்வித தொடர்பும் இல்லாமல் தொடர்ந்து 7 வருடங்கள் வெளிநாட்டில் வாழ்ந்தால் குடியுரிமையை இழக்க நேரிடும்.
- தாமாக வந்து தனது குடியுரிமையை துறப்பவர்களின் 18 வயது நிரம்பாத குழந்தையின் குடியுரிமையை பரிக்கப்படும், 18 வயதிற்கு பிறது வேண்டுமானால் குடியுரிமை பெற முடியும்.
- இரட்டை குடியுரிமை பெற்ற நாடுகள்: அமெரிக்கா, சுவிட்சர்லாந்து
- ஒற்றை குடியுரிமை பெற்ற நாடுகள்: இந்தியா, கனடா
- இந்தியா என்றும் கூட்டாசியுடன் கூடிய ஒற்றையாட்சி.

**உள்ளாட்சி அரசாங்கம்**

**பஞ்சாயத்து ராஜ்**

- பகுதி 9-ல் விதி 243 முதல் 243O- வரை கூறப்பட்டுள்ளது.
- பஞ்சாயத்து ராஜ் முதன் முறையாக ராஜஸ்தானில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- ராஜஸ்தானில் நாகவூர் என்ற பகுதியில் அக்டோபர் 2-1959-ல் ஜவஹர்லால் நேரு அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது
- பஞ்சாயத்து ராஜ் முதன் முறையாக 64வது மற்றும் 65வது சட்டத்திருத்தம் 1989-ல் பிரதமர் ராஜீவ்காந்தி அவர்களால் முதன் முறையாக பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் ராஜ்ய சபாவில் ஏற்றுக் கொள்ளப்படாததால் சட்டமாக்கப்படவில்லை
- பிறகு 73 வது சட்டத்திருத்தம் 1992-ல் பிரதமர் நரசிம்ம ராவ் அவர்களால் பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு பஞ்சாயத்து ராஜ் நடைமுறைபடுத்தப்பட்டது.
- 1992,73 வது சட்டத்திருத்தம் மூலம் அட்டவணை 11 உருவாக்கப்பட்டது
- 11வது அட்டவணையில் பஞ்சாயத்து ராஜ் பற்றி 29 துறைகள் விளக்கப்பட்டுள்ளது.
- பஞ்சாயத்து ராஜ் ஏப்ரல் 24,1993- ல் நடைமுறைபடுத்தப்பட்டது.

  பஞ்சாயத்து ராஜ் -ன் மூன்று கட்ட அரசு (விதி 243c)
  - மாவட்ட பஞ்சாயத்து – மாவட்ட அளவில்
  - ஊராட்சி ஒன்றியம் - ஒன்றிய அளவில்
  - கிராம பஞ்சாயத்து – கிராமத்தின் அளவில்

**பஞ்சாயத்து ராஜ்-காக அமைக்கப்பட்ட குழுக்கள்**

- பல்வந்த் ராய் மேத்தா குழு 1957
- அசோக் மேத்தா குழு 1977
- தன்ட்வாலா கமிட்டி 1978
- ஹனுமந்த ராவ் குழு 1984
- G.V.K . ராவ் குழு 1985
- L .M. சிங்வி குழு 1986

**பல்வந்த் ராய் மேத்தா குழு 1957**

- பல்வந்தராய் மேத்தா குழு ஜனவரி 1957-ல் அமைக்கப்பட்டது.
- இந்த குழு 1957 நவம்பரில் அறிக்கை தாக்கல் செய்தது.
- இந்த குழு மூன்று கட்ட பஞ்சாயத்திற்கு பரிந்துரை செய்தது.
- கிராம பஞ்சாயத்து தலைவர்கள் நேரடி தேர்தல் மூலம் மட்டுமே தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும் மாவட்ட பஞ்சாயத்து மற்றும் பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் மறைமுகமாக தேர்ந்தெடுக்கலாம் என்றும் அறிவுறுத்தினர்.
- அனைத்து துறைகள் வளர்ச்சிக்காகவும் இந்த பஞ்சாயத்துமுறை செயல்பட வேண்டும் என்று பரிந்துரை செய்யப்பட்டது.
- மாவட்ட பஞ்சாயத்து அல்லது ஜில்லா பரிஷத்திற்கு தலைவர் மாவட்ட ஆட்சியர் ஆவார் என்று பரிந்துரை செய்யப்பட்டது
- இவருடைய அறிக்கையின் பரிந்துரைகளை தேசிய வளர்ச்சி குழு 1958 ஜனவரியில் ஏற்றுக் கொண்டது.
- உள்ளாட்சி அரசாங்கத்தின் ‘‘மகாசாசனம்’’ என்று பல்வந்தராய் மேத்தா குழுவின் அறிக்கையை குறிப்பிடுகின்றனர்.

**அசோக் மேத்தா குழு 1977**

- அசோக் மேத்தா குழு 1977-ல் ஜனதா அரசு அமைத்தது
- அசோக் மேத்தா குழு ஆகஸ்டு 1978-ல் அறிக்கை தாக்கல் செய்தது
- உள்ளாட்சி அமைப்புகளின் பணிகளை மேம்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட குழு
- இந்த அறிக்கையில் இரண்டு கட்ட பஞ்சாயத்திற்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.
    - கிராம தொகுப்பு – மண்டல பஞ்சாயத்து
    - மாவட்ட அளவில் - ஜில்லா பரிஷத்
- பஞ்சாயத்து மூலம் வரி விதிக்கலாம் என்று பரிந்துரை செய்யப்பட்டது
- பஞ்சாயத்து ராஜ் தேர்தலில் அரசியல் கட்சிகள் பங்கேற்க வேண்டும் என்று பரிந்துரை செய்யப்பட்டது.
- SC, ST இட ஒதுக்கீடு அவர்களின் மக்கள் தொகை அடிப்படையில் இருக்க வேண்டும் என்று கூறியது.
- பஞ்சாயத்து ராஜ் உறுப்பினர்களில் ஏதேனும் வெற்றிடம் ஏற்படும்பொழுது அதனை 6 மாதத்திற்குள் தேர்தல் மூலம் நிரப்ப வேண்டும் என்று பரிந்துரை செய்யப்பட்டது.
- பஞ்சாயத்து ராஜ்காக அமைக்கப்பட்ட குழுக்களில் பல்வந்த் ராய் மேத்தா மற்றும் அசோக் மேத்தா குழுக்களின் பல பரிந்துரைகள் எடுத்துக் கொள்ளப்பட்டது.

**G.V.K. ராவ் குழு 1985**

- 1985 – கமிட்டி அமைக்கப்பட்டது
- 1986 – அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது
- **பரிந்துரைகள்**
  1. மாவட்ட மன்றத்தை மேலும் பலப்படுத்த வேண்டும்
  2. மாவட்ட வளர்ச்சி ஆணையர் (district development commissioner) என்ற புதிய பதவி உருவாக்கப்பட வேண்டும்.

**L .M. சிங்வி குழு 1985**

- 1986 – அமைக்கப்பட்டது
- **பரிந்துரைகள்**
  1. பஞ்சாயத்து ராஜ்ய அமைப்புகளை அரசியலமைப்பால் பாதுகாக்க வேண்டும்.
  2. கிராமங்களின் தொகுப்பாக நியாய பஞ்சாயத்துக்களை உருவாக்க வேண்டும்.
  3. கிராமசபை நேரடி மக்களாட்சியின் ஆற்றல்மிக்க கருவியாக செயல்பட வேண்டும்.
  4. பஞ்சாயத்து தேர்தல் பிரச்சனைகளை தீர்க்க நீதி தீர்ப்பாயம் ஏற்படுத்த வேண்டும்.
  5. நியாய பஞ்சாயத்துக்களை வலியுறுத்தியது.

**பஞ்சாயத்து பற்றிய பிற தகவல்கள்**

- பஞ்சாயத்து ராஜின் கடைசி அமைப்பு கிராம சபை அல்லது கிராம சமிதி
- மாவட்ட பஞ்சாயத்து தலைவர் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆவார்.
- பஞ்சாயத்து தலைவர் சேர்மன் என்று அழைக்கப்படுவார்
- பஞ்சாயத்து தேர்தலில் போட்டியிட குறைந்த பட்ச வயது 21 ஆகும்.
- பஞ்சாயத்து அமைப்பின் பதவிக் காலம் 5 ஆண்டுகளாகும்.
- பஞ்சாயத்து ஒன்றியம் 112 கிராமங்களை கொண்டுள்ளது.
- பஞ்சாயத்து ஒன்றியம் அல்லது ஊராட்சி ஒன்றியம் என்று அழைக்கப்படுகிறது.
- பஞ்சாயத்து ஒன்றியம் ஒரு இடைநிலை அடுக்காகும்.
- பஞ்சாயத்து ஒன்றியத்தில் தலைவர் மற்றும் துணைத்தலைவர் பதவிகள் காலியாக இருக்குமாயின் வட்டார வருவாய் அதிகாரி தலைவராக தற்காலிகமாக இருப்பார்.
- மாவட்ட நிர்வாகம் என்பது
  1. மாவட்டத்திற்குள் சட்டம் ஒழுங்கு நிரிவாகத்தை மேற்கொள்ளுதல்
  2. மாவட்டத்திற்குள் வருவாய் நிரிவாகம்
  3. மாவட்டத்திற்குள் மேம்பாடு நிர்வாகம் போன்றவற்றை நிர்வகிக்கிறது
- மாவட்ட ஆட்சியர் என்பவர்
  1. மாவட்ட செசன்ஸ் அதிகாரி
  2. மாவட்ட நீதிபதி
  3. மாவட்ட தேர்தல் அதிகாரி
  4. மாவட்டத்தில் பலதரப்பட்ட பணிகளை செய்பவர்

**கிராம சபை – கிராம பஞ்சாயத்து (விதி 243 A)**

- பஞ்சாயத்தின் அடித்தளம் என்பது கிராம சபையாகும்
- சராசரியாக 500 மக்கள் தொகையுடன் ஒன்று அல்லது இரண்டுக்கு மேற்பட்ட கிராமங்களை ஒன்றிணைத்து இருப்பது கிராம பஞ்சாயத்து என்கிறோம்
- நேரடி மக்களாட்சியின் அடிப்படை அலகு கிராம பஞ்சாயத்து ஆகும்.
- கிராம பஞ்சாயத்தின் உறுப்பினரின் குறைந்தபட்ச எண்ணிக்கை5, அதிகபட்ச எண்ணிக்கை 15 ஆகும்.
- கிராம சபையில் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்களின் நம்பிக்கை இல்லா தீர்மானம் மூலம் பதவியிலிருந்து பஞ்சாயத்து உறுப்பினர்கள் மற்றும் தலைவர் நீக்கப்படலாம்.
- கிராம சபை வருடத்திற்கு நான்கு முறையாவது கூட்ட வேண்டும்.
- ஜனவரி 26, மே 1, ஆகஸ்டு 15, அக்டோபர் 2.
- தமிழ்நாட்டில் மார்ச் 22, நவம்பர் 1 ஆகிய தினங்களிலும் கிராமசபை கூட்டம் நடைபெறும்.

**பஞ்சாயத்து அமைப்பின் நிர்வாக அமைப்புத் தலைவர்கள்**

- மாவட்ட பஞ்சாயத்த அல்லது ஜில்லா பரிஷத் - மாவட்ட ஆட்சித் தலைவர்
- பஞ்சாயத்து யூனியன் அல்லது பஞ்சாயத்து சமிதி – வட்டார வளர்ச்சி அலுவலர்
- கிராம பஞ்சாயத்து அல்லது கிராம சபை – கிராம நிர்வாக அலுவலர்

**யூனியன் பிரதேசங்களில் பஞ்சாயத்து அரசு (விதி 243 L)**

- குடியரசுத் தலைவர் நேரடியாக யூனியன் பிரதேசங்களுக்கு பஞ்சாயத்து சட்டங்களை நிறைவேற்றுவார் மற்றும் நிர்வகிப்பார்.

**5-வது அட்டவணை பகுதிகள்**

- இது போன்ற இடங்களில் PESA - 1996 என்ற சட்டம் செயல்பட்டு வருகிறது.
- PESA – Panchayat Extensionn Scheduled Area
- முதன் முதலாக பஞ்சாயத்து தேர்தல் நடத்திய மாநிலம் மத்திய பிரேதசம்

- தமிழ்நாட்டில் 1994-ல் பஞ்சாயத்து ராஜ் உருவாக்கப்பட்டது
- தமிழ்நாட்டில் பஞ்சாயத்து ராஜ் சட்டத்திற்கு முன்பு 1960-ல் இரண்டு கட்ட உள்ளாட்சி அமைப்பை பெற்று இருந்தது.
- ராஜஸ்தானிற்கு பிறகு ஆந்திராவில் பஞ்சாயத்து ராஜ் 1959-ல் அறிமுகப்படுத்தப்பட்டது.
- மேற்கு வங்காளத்தில் 1960-ல் 4 கட்ட பஞ்சாயத்து செயல்பட்டு வந்தது.

**விதிகள்**

| விதிகள் | விளக்கம் |
|---|---|
| 243 | உள்ளாட்சி அரசு பற்றிய விளக்கம் |
| 243A | கிராம சபை |
| 243B | பஞ்சாயத்து அமைப்பு |
| 243C | பஞ்சாயத்து கட்டமைப்பு |
| 243D | இட ஒதுக்கீடு |
| 243E | பஞ்சாயத்து அரசின் பதவிக்காலம் |
| 243F | பஞ்சாயத்து உறுப்பினர்களின் தகுதி நீக்கம் |
| 243G | பஞ்சாயத்து அதிகாரங்கள், பஞ்சாயத்து பணிகள் |
| 243H | பஞ்சாயத்தின் வரி விதிப்பு |
| 243I | மாநில நிதி ஆணையம் |
| 243J | பஞ்சாயத்து கணக்குகள் தணிக்கை செய்யும் அதிகாரம் |
| 243K | பஞ்சாயத்து தேர்தல் |
| 243L | யூனியன் பிரதேசங்களில் பஞ்சாயத்து முறை |
| 243M | பஞ்சாயத்து முறை ஒருசில ஆட்சிப் பகுதிகளுக்கு பொருந்தாது. |
| 243N | பஞ்சாயத்து சட்டங்கள் தொடர்பாக இயற்றப்படும் விதிகள் |
| 243O | பஞ்சாயத்து தேர்தல் விஷயங்களில் நீதிமன்றம் தலையிடுவதற்கு தடை |

**நகராட்சிகள் (பகுதி IX-A)**

- பகுதி IX-A 74 வது அரசியலமைப்புத்திருத்தச் (1992) சட்டத்தின்படி இணைக்கப்பட்டது.

**நகரபஞ்சாயத்து ராஜ்**

- 1687 -88-ல் இந்தியாவின் முதல் முனிசிபல் காாப்பரேஷனாக மெட்ராஸ் அறிவிக்கப்பட்டது.
- 1726- பம்பாய் மற்றும் கல்கத்தா ஆகியன முனிசிபல் கார்ப்பரேஷனாக அறிவிக்கப்பட்டன.
- 1870- ல் ரிப்பன் பிரபுவால் வெளியிடப்பட்ட தீர்மானமானது தலசுயாட்சிகள் மகாசாசனமாக திகழ்கிறது
- 1907 அதிகாரபரவல் தொடர்பான ராயல் கமிஷன் அமைக்கப்பட்டது.
- 1919 – மாகாணங்களில் இரட்டையாட்சி அறிமுகம்.
- 1924 – கன்டோன்ட்மெண்ட் சட்டம் அறிமுகம்
- 1985 – நகர்புற மேம்பாட்டு அமைச்சகம் தொடங்கப்பட்டது
- 1992 – 74 வது சட்டத்திருத்தம் நிறைவேற்றம்
- 1993 – 74 வது சட்டத்திருத்தம் நடைமுறைக்கு வந்தது
- ரிப்பன் பிரபுதலசுயாட்சியின் தந்தை என அழைக்கப்படுகிறார்.
- 1992-ம் ஆண்டு 74-வது அரசியலமைப்புத்திருத்தச் சட்டம் மூலம் நகரபஞ்சாயத்துராஜ் கொண்டுவரப்பட்டது. இச்சட்டம் 1.8.1993-ல் நடைமுறைக்கு வந்தது.
- இச்சட்டத்தின் வாயிலாக அரசியலமைப்பில் பகுதி IX-A என்ற புதிய பகுதியும் விதிகள் 243 Pமுதல் 243 ZG வரையும் உருவாக்கப்பட்டுள்ளன.

- மேலும் XII-வது அட்டவணையில் நகர பஞ்சாயத்து ராஜ்ஜியத்திற்கு என 18 இனங்களும் கொண்டுவரப்பட்டுள்ளன.

**பகுதி - 9 A நகராட்சிகள்**

| | |
|---|---|
| விதி 243 P | சொற்பொருள் விளக்கங்கள் |
| விதி 243 Q | நகராட்சியின் அமைப்பு |
| விதி 243 R | நகராட்சிகளை அமைத்தல |
| விதி 243 S | வார்டு குழுக்கள் அமைப்பும் அதனை ஏற்படுத்ததலும் |
| விதி 243 T | இட ஒதுக்கீடு |
| விதி 243 U | நகராட்சிகளின் பதவிக்காலம் |
| விதி 243 V | உறுப்பினர்களின் தகுதியிழப்புகள் |
| விதி 243 W | நகராட்சியின் அதிகாரங்கள் அதிகாரநிலைமற்றும் பொறுப்படைவுகள் |
| விதி 243 X | நகராட்சிகள் வரிகள் விதிப்பதற்கான அதிகாரங்களும் நகராட்சிகளின் நிதிகளும் |
| விதி 243 Y | நிதிஆணையம் |
| விதி 243 Z | நகராட்சிகளின் கணக்குகள் தணிக்கை |
| விதி 243 ZA | நகராட்சிகளுக்கானதேர்தல் |
| விதி 243 ZN | ஒன்றிய மண்டலங்களுக்கு (யூனியன் பிரதேசங்களுக்கு) பொருந்துதல் |
| விதி 243 ZC | இந்தப் பகுதிசில ஆட்சிப் பகுதிகளுக்குப் பொருந்தாது |
| விதி 243 ZD | மாவட்டத் திட்டத்திற்கான குழு |
| விதி 243 ZE | பெருநகர (மாநகர) வளர்ச்சிக் குழு |
| விதி 243 ZF | நிகழ்நிலையிலிருக்கும் சட்டம் மற்றும் ஊராட்சிகள் தொடர்ந்திருத்தல் |
| விதி 243 ZG | தேர்தல் விஷயங்களில் நீதிமன்றம் தலையிடுவதற்குத் தடை |

**சாதாரண பெரும்பான்மையில் நிறைவேறும் மசோதாக்கள்**

- புதிய மாநிலங்களை உருவாக்குதல் மற்றும் நிர்வகித்தல்
- மாநிலங்கள் எல்லைகளை சீர்திருத்துதல்
- மாநிலங்கள் பெயர்கள் மாற்றுதல்
- மாநில சட்டப்பேரவையில் உள்ள சட்டமேலவையை கலைத்தல்
- இரண்டாவது ஐந்தாவது ஆறாவது அட்டவணைகள் தொடர்பானவை
- பாராளுமன்ற உறுப்பினர்கள் சம்பளம் பற்றிய திருத்த மசோதாக்கள்
- பாராளுமன்ற விதிமுறைகளை திருத்தம் மசோதாக்கள்
- பாராளுமன்றத்தில் பயன்படுத்தும் மொழிகள் பற்றிய மசோதாக்கள்
- உயர்நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகளை அதிகரிக்கும் மசோதாக்கள்
- குடியுரிமையை பற்றிய திருத்த மசோதாக்கள்
- யூனியன் பிரேதங்கள் பற்றிய திருத்த மசோதாக்கள்

**சிறப்பு பெரும்பான்மையுடன் பாராளுமன்ற ஒப்புதல் மட்டும் பெறும் சட்டத்திருத்த மசோதாக்கள்**

- அடிப்படை உரிமைகள் பற்றிசட்டத்திருத்த மசோதா
- அரசு நெறிமுறை கோட்பாடுகள் மற்றும் மாநில கொள்கைகள் பற்றிய சட்டத்திருத்த மசோதா

**சிறப்பு பெரும்பான்மையுடன் மாநில சட்டப்பேரவை மற்றும் பாராளுமன்ற ஒப்புதல் பெற்று சட்டத்திருத்த மசோதாக்கள்**

- குடியரசுத் தலைவரைத் தேர்வு செய்யும் முறை மற்றும் தேர்தல்கள்
- மத்திய, மாநில அரசின் நிர்வாக அதகாரம் பற்றிய திருத்த மசோதா
- உச்சநிதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற திருத்த மசோதா

- மத்திய ஆட்சி மற்றும் மாநிலங்களுக்கு இடையே சட்டமியற்றும் அதிகாரம் பற்றிய திருத்த மசோதா
- 7-வது அட்டவணையில் சட்டதிருத்த மசோதா
- சட்டத்திருத்த விதிகளை மாற்றும் மசோதா

**42வது அரசியலமைப்பு சட்டத்திருத்தம் 1976***

- இந்த சட்டத்திருத்தம் மிக நீண்ட சட்டத்திருத்தமாகும்
- இந்த சட்டத்திருத்தம் சிறிய அரசியலமைப்பு என்று அழைக்கப்படுகிறது
- இந்த சட்டத்திருத்தம் 18.12.1976-ல் குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்தார்.
- 03.01.1977-ல் நடைமுறைப்படுத்தப்பட்டது
- இந்த சட்டத்திருத்தத்தை ஏற்படுத்திய பிரதமர் இந்திராகாந்தி
- ஸ்வரண்சிங் குழுவின் பரிந்துரை பெயரிலே பல மாற்றங்கள் செய்யப்பட்டன

**சட்டத்திருத்தங்கள்**

**1. முகப்புரையில் மாற்றங்கள்**

- சமதர்மம் மதசார்பற்ற ஒருமைப்பாடு என்ற வார்த்தைகள் சேர்க்கப்பட்டது
- முகப்புரையில் மாற்றம் செய்த ஒரே சட்டத்திருத்தம் இதுதான்

**2. அடிப்படை கடமைகள்**

- விதி IV-A என்ற பகுதி சேர்க்கப்பட்டது
- விதி 51-A சேர்க்கப்பட்டு அதில் 10 கடமைகள் சேர்க்கப்பட்டது

**3. மத்திய மாநில அதிகாரங்கள் பற்றிய திருத்தங்கள்**

- 7வது அட்டவணையில் மாநில பட்டியலிருந்து கல்வி, அளவுகள் காடுகள், வனவிலங்குள் பறவைகளைத் பாதுகாத்தல் நிதி நிர்வாகம் போன்றவற்றை பொதுப்பட்டியலிற்கு மாற்றியது.

**4. நிர்ப்பாயங்கள்**

- முக்கியமான தீர்ப்பாயங்கள் ஏற்படுத்தியது இதில் விதி 323A, விதி 323B என்பது சேர்க்கப்பட்டது.

**5. அரசுப்பணிகள் பற்றிய திருத்தங்கள்**

- அனைந்திந்திய நீதிப் பணிகள் தொடங்க விதி 312 திருத்தப்பட்டது

**6. நீதித்துறை பற்றிய திருத்தங்கள்**

- உயர்நீதிமன்ற வழக்குகளை உச்சநீதிமன்றத்திடம் மாற்றுவதற்கான அதிகாரத்தை வழங்குகிறது.
- மத்திய அரசு கொண்டு வரும் சட்டத்தை நீதிமன்றங்கள் ஆராயத் தடை விதித்தது.

**7. அரசு நெறிமுறைக் கோட்பாடுகள் மற்றும் மாநில கொள்கையில் மாற்றங்கள்**

- அடிப்படை உரிமையை விட அரசுநெறிமுறைக் கோட்பாடிற்கு முக்கியத்துவம் அளிக்கிறது
- 39(f), 39A, 43A, 48A போன்ற விதிகள் பகுதி IV-ல் சேர்க்கப்பட்டது

**8. மத்திய அரசு பற்றிய திருத்தங்கள்**

- குடியரசுத் தலைவர் அமைச்சர்கள் குழுவின் ஆலோசனைக்கு கட்டுப்பட்டவர் என்பதை தெளிவுப்படுத்தியது
- குடியரசுத் தலைவர் ஏதேனும் ஒரு பகுதியில் கூட அவசரகால பிரகடனத்தை அறிவிக்கலாம் என்று கூறப்பட்டது
- அவசரகால பிரகடனம் ஓராண்டு காலம் நீட்டிக்கலாம் என்று மாற்றப்பட்டது.
- மக்களவை மற்றும் மாநில சட்டமன்றங்களின் பதவிக்காலம் 6 ஆண்டுகள் கொண்டுவரப்பட்டது.

**44-வது அரசியலமைப்பு சட்டத்திருத்தம் 1978**

- சொத்துரிமை அடிப்படை உரிமைகளிலிருந்து நீக்கப்பட்டு விதி 300A –ல் சேர்க்கப்பட்டு சட்ட உரிமையாக்கப்பட்டது.
- விதி 31 நீக்கப்பட்டது
- விதி 38(2) சேர்க்கப்பட்டது
- குடியரசுத்தலைவர் மற்றும் துணைக்குடியரசுத்தலைவர் தேர்தல் குறித்து உச்சநீதிமன்றத்தால் மட்டுமே முடிவு செய்யப்பட்ட வேண்டும் என்று கூறியது.
- மக்களவை சட்டமன்றத்தின் பதவிக்காலம் 6 ஆண்டுகளிலிருந்து 5 ஆண்டுகளுக்கு மாற்றம் செய்யப்பட்டது.
- நாடாளுமன்ற உறுப்பினர்களின் தகுதியின்மை குறித்து இறுதி முடிவு குடியரசுத்தலைவர் தெரிவிப்பார்.
- உயர் நீதிமன்றத்தின் வழக்குகள் தாமாகவோ (அ) மனுதாரரின் பேரிலோ மாற்றப்படலாம்
- அமைச்சரவை எழுத்து வடிவில் அவசர கால பிரகடனத்திற்கு குடியரசுத்தலைவரிடம் கடிதம் கொடுத்தால் மட்டுமே குடியரசுத்தலைவர் அவசர கால பிரகடனத்தை அறிவிக்க முடியும்.
- அவசர கால பிரகடனத்தை 1 வருடத்திலிருந்து மீண்டும் 6 மாதத்திற்கு மட்டுமே நீட்டிக்க முடியும் என்று மாற்றப்பட்டது.
- ஆயுத கிளர்ச்சியின் போது அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டால் விதி 19-யை நிறுத்தி வைக்க முடியாது என்று மாற்றப்பட்டது.
- அவசர பிரகடனத்தின் போது விதி 20 மற்றும் 21-ஐ நிறுத்தி வைக்க முடியாது என்று கூறப்பட்டுள்ளது.
- 9வது அட்டவணையில் சில மாற்றங்களை கொண்டு வந்தது.
- 42-வது சட்டத் திருத்தத்திற்கு மாற்றமே 44வது சட்டத்திருத்தம்
- தேவையற்ற மாற்றங்களை நீக்கி மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வந்தது.
- 44-வது சட்டத்திருத்தத்தை கொண்டு வந்த பிரதமர் மொரார்ஜி தேசாய்

---